# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## TERM TEST - I ( 2017-2018 )

**CLASS : VI**

| | | |
|---|---|---|
| Maximum Marks : 80 | **TAMIL** | Time : 3 hours |
| மதிப்பெண்கள் : 80 | **தமிழ்** | நேரம் : 3 மணி |

## பகுதி - அ

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

குயில் இனிமையாகக் கூவும். குயில் மரங்களிலும், சோலைகளிலும் வாழும். காக்கையைப் போன்று குயில், கறுப்பு நிறமுடையது. ஆனால் காக்கையை விட குயில் உருவத்தில் சிறியது. இதன் அலகு கூரியதாயும், சற்று வளைந்துமிருக்கும். குயில் பழங்கள், பூச்சிகள் ஆகியவற்றைத் தின்னும். பெண் குயிலுக்கு மட்டும் உடம்பில் வெண் புள்ளிகளும், சிறு கோடுகளும் உண்டு. இதற்குக் கூடு கட்டத் தெரியாது. குயில், தன் முட்டைகளைக் காக்கையின் கூட்டில் இட்டுக் குஞ்சு பொரிக்கச் செய்யும்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

1. **குயில் _______ நிறமுடையது.**

   அ ) வெள்ளை ஆ) கறுப்பு

   இ) பச்சை ஈ) சிவப்பு

2. **குயில் வாழும் இடங்கள் _________.**

   அ ) மலைகள், பாறைகள் ஆ) மரங்கள், சோலைகள்

   இ) குகைகள், பொந்துகள் ஈ) கடல், ஏரி

3. **குயிலின் உணவு _________.**

   அ ) பழங்கள், பூச்சிகள் ஆ) பல்லிகள், தவளைகள்

   இ) தானியங்கள் ஈ) இலை, தழைகள்

4. **உடலில் சிறு புள்ளிகளையும், கோடுகளையும் உடையது _________.**

   அ ) ஆண் குயில் ஆ) ஆண் காக்கை

   இ) பெண் குயில் ஈ) பெண் காக்கை

5. **குயில் இனிமையாகக் ________.**

   அ ) கொக்கரிக்கும் ஆ) கரையும்

   இ) கத்தும் ஈ) கூவும்

2) தேசிகவிநாயகர் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரத்தை அடுத்த தேரூரில் 27-07-1876 அன்று பிறந்தார். தந்தையார், சிவதாணுப்பிள்ளை, தாயார் ஆதிலட்சுமி அம்மையார். இவர் பாடல்கள் இனிமையும், எளிமையும் வாய்ந்தவை. குழந்தைகளுக்காகத் தெளிந்த தமிழில் இனிய கவிகள் பாடி வழி காட்டியவர். இவருடைய பாடல்களின் அருமை பெருமைகளைப் பாராட்டித் தமிழ்நாடு இவரைக் கவிமணி எனப் போற்றியது. இவர் ஆசியஜோதி, உமர்கய்யாம், மருமக்கள் வழி மான்மியம், கவிமணியின் உரைமணிகள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

1. **கவிமணி எங்கு பிறந்தார் ?**
2. **கவிமணி பெற்றோர் யாவர் ?**
3. **கவிமணியின் பாடல்களின் தன்மை யாது ?**
4. **தமிழ்நாடு தேசிகவிநாயகம் பிள்ளையை எவ்வாறு சிறப்பித்துப் போற்றியது ?**
5. **கவிமணி எழுதிய இரு நூல்களைக் குறிப்பிடுக.**

3) **கடிதம் எழுதுக.** **1 x 6 = 6**

உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

4 ) **கட்டுரை எழுதுக.** **1 x 8 = 8**

நான் விரும்பும் பறவை ( அல்லது ) விலங்கு

## பகுதி - ஆ

5 ) **சான்று தருக.** **3 x 1 = 3**

1. **உயிர்மெய் குற்றெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ள சொல்.**

   அ ) காளை ஆ) களிறு

   இ) வாரணம் ஈ) வேங்கை

2. **பெயர்ச்சொல்**

   அ ) ஆலயம் ஆ) ஓடினாள்

   இ) போனான் ஈ) சாலப் பேசினான்

3. **வல்லினம்**

   அ ) க் , ச் , ட் , த் , ப் , ற் ஆ) ங் , ஞ் , ண் , ந் , ம் , ன்

   இ) ய் , ர் , ல் , வ் , ழ் , ள் ஈ) அ, இ, உ, எ, ஒ

6 ) **நிரப்புக.** **3 x 1 = 3**

1. **மொழியை திருத்தமாகப் பேச, எழுத துணைபுரிவது ____________ ஆகும்.**

அ ) எழுத்து ஆ) சொல்

இ) மாத்திரை ஈ) இலக்கணம்

2. **தமிழ் இலக்கணம் ___________ வகைப்படும்.**

அ ) எட்டு ஆ) ஐந்து

இ) நான்கு ஈ) ஆறு

3. **பெயரையும் , வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் ________.**

அ ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்

இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

7 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.** **3 x 1 = 3**

1. **செங்கோட்டை ( மாத்திரை கூறு )**

அ ) ஏழு ஆ) ஐந்து

இ) நான்கு ஈ) ஆறு

2. **நகர் ( தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக )**

அ ) தலைநகர் ஆ) புறநகர்

இ) மாநகர் ஈ) கலைநகர்

3. **கோயிலைக் கட்டினான் ( இடைச்சொல்லை எடுத்து எழுதுக )**

அ ) ஐ ஆ) கோயில்

இ) ஆன் ஈ) கட்டினான்

8 ) **இலக்கணக்குறிப்பு தருக.** **3 x 1 = 3**

1. **உறுமீன்**

அ ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்

இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

2. **பாவை**

அ ) ஓரெழுத்துச் சொல் ஆ) ஈரெழுத்துச் சொல்

இ) மூவெழுத்துச்சொல் ஈ) நான்கெழுத்துச்சொல்

3. **ஃ**

அ ) குறில் ஆ) நெடில்

இ) தனிநிலை ஈ) மெல்லினம்

9 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**1.** அ) சொல் நான்கு வகைப்படும்.
ஆ) சொல் மூன்று வகைப்படும்.
இ ) சொல் ஐந்து வகைப்படும்.
ஈ ) சொல் இரண்டு வகைப்படும்.

**2.** அ) ஆய்த எழுத்தின் மாத்திரை ஒன்று ஆகும்.
ஆ) ஆய்த எழுத்தின் மாத்திரை இரண்டு ஆகும்.
இ) ஆய்த எழுத்தின் மாத்திரை அரை ஆகும்.
ஈ ) ஆய்த எழுத்தின் மாத்திரை ஒன்றரை ஆகும்.

**3.** அ) மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை பதினெட்டு ஆகும்.
ஆ) மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை பன்னிரெண்டு ஆகும்.
இ) மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை இருநூற்றுப்பதினாறு ஆகும்.
ஈ ) மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை ஏழு ஆகும்.

## பகுதி - இ

10) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6 x 1 = 6**

**1. எதனை உடனே மறத்தல் வேண்டும் ?**
அ ) பிறர் நமக்குச் செய்த நன்மையை
ஆ) நாம் பிறருக்குச் செய்த தீமையை
இ) பிறர் நமக்குச் செய்த தீமையை

**2. திருக்குறளில் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் எத்தனை ?**
அ ) 133 ஆ) 1330 இ) 1300

**3. இடும்பை - என்பதன் பொருள் யாது ?**
அ ) துன்பம் ஆ) கோபம் இ) உண்மை

**4. எறும்பு சங்கின் மறுபுறம் வர _______ துண்டு வைக்கப்பட்டது.**
அ ) கற்கண்டு ஆ) சுண்ணாம்பு இ) பாக்கு

**5. அரசவைக்கு வந்த அறிஞர் யார் ?**
அ ) வளவன் ஆ) செழியன் இ) அதியமான்

**6. அறிஞர் கூறிய செயலைச் செய்பவர்க்கு அரசர் அறிவித்த பரிசு யாது ?**
அ ) ஆயிரம் பொற்காசுகள் ஆ) தங்க ஆபரணங்கள் இ)முத்து மாலைகள்

11) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக** **5 x 2 = 10**

1. **பொருள் தருக.**

   ஆணை = ________

   காவாக்கால் = ________

2. **பிரித்து எழுதுக.**

   வித்தாகும் = ________

   பொறுத்தருள்க = ________

3. **சேர்த்து எழுதுக.**

   பொன் + காசு = ________

   தீ + ஒழுக்கம் = ________

4. **எதிர்ச்சொல் எழுதுக.**

   பயனுடைய X ________

   நன்று X ________

5. **முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொல் ஆக்குக.**

   நாடி, ________, ________

   சொல், ________, ________

12) **ஏதேனும் நான்கிற்கு மட்டும் குறுகிய விடை தருக.** **4 x 2 = 8**

1. தன்னெஞ்சே தன்னைச் சுடும் - ஏன் ?
2. மதிவாணன் " என்னைப் பொறுத்தருள வேண்டும் " என்று ஏன் கூறினான் ?
3. மதிவாணன் தன் தந்தையை எங்கே மறைத்து வைத்தான் ?
4. மன்னர் முதியவர்களை நாடு கடத்தக் காரணம் என்ன ?
5. எப்பொழுதும் துன்பம் தருவது எது ?

13) **ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** **1 x 5 = 5**

1. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர் கூறிய செயல்கள் யாவை ?
2. சாம்பலில் கயிறு செய்தது எப்படி ?

14) **அடி பிறழாமல் எழுதுக** **3 x 2 = 6**

1. **சொல்லுக** - எனத் தொடங்கும் திருக்குறள்
2. **சுடும்** - என முடியும் திருக்குறள்
3. **சினம்** - என முடியும் திருக்குறள்

**1 x 6 = 6**

15) **முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குப்படுத்திப் பத்தியாக்குக.**

1 இளையவன் மெழுகுவர்த்தியை வாங்கி வந்து ஏற்றி வைத்து, அறையெங்கும் ஒளிவீசச் செய்தான்.

2 வயதான தந்தைக்கு இரு மகன்கள் இருந்தார்கள்.

3 ஒருநாள் இருவரையும் அழைத்துச் சிறிது பணம் கொடுத்தார். இந்தப் பணத்தைக் கொண்டு அவரவர் அறையை நிரப்புங்கள் என்றார் தந்தை.

4 அவர்களிருவரில் பொறுப்பானவரைத் தேர்ந்தெடுத்துத் தன் உழைப்பின் பயனாய் விளைந்த செல்வத்தைக் கொடுக்க தந்தை விரும்பினார்.

5 மூத்தவன் வைக்கோல் போரை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான்.

6 இளையவன்தான் பொறுப்பானவன் என்று தந்தை உணர்ந்தார்.

7 அறையெங்கும் ஒளி வீசச் செய்தவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தார்.